செ.வெ.எண்-45 நாள்-25.08.2021

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் உள்ள நகர்புற பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கு தீன்தயாள் அந்தியோதயா யோஜனா தேசிய நகர்புற வாழ்வாதார இயக்க (DAY-NULM) திட்டத்தின்கீழ் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சி அளிப்பதற்கு தீன்தயாள் அந்தியோதயா யோஜனா, தேசிய நகர்புற வாழ்வாதார இயக்க வழிகாட்டி நெறிமுறைகளின்படி கீழ்கண்ட தகுதியுள்ள நிறுவனங்களிடமிருந்து கருத்துருக்கள் வரவேற்கப்படுகின்றன.

திறன் வளர்ப்பு பயிற்சி நிறுவனங்கள் தேசிய திறன்வளர்ப்பு நிறுவனத்தில் (NSDC) பதிவு செய்யப்பட்டு, ஸ்மார்ட் அங்கீகாரம் (SMART Accreditation) பெற்றிருக்க வேண்டும். பிரதமமந்திரி கௌஷல் கேந்ரா (PMKK) மையம் வைத்திருப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும். முந்தைய ஆண்டுகளில் அரசு நிதியுதவி பெற்று வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சி வெற்றிகரமாக நடத்தப்பட்டிருப்பின் அந்நிறுவனம் கருத்தில் கொள்ளப்படும்.

எனவே தகுதியுள்ள நிறுவனங்கள் தங்களது கருத்துருக்களை **"திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, அறை எண்-215 மாவட்ட ஆட்சியரக அலுவலகம், அரியலூர்"** என்ற முகவரிக்கு **31.08.2021** பிற்பகல் **5.00** மணிக்குள் சமர்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**